சுடர்

அக்'84
50 காசு

44
மாத இதழ்

FREE E-BOOKS , www.thamizham.net.,

FREE E- BOOKS , www.thamizham.net.,

இந்தியன்



சாலை ஓரங்களில்
'சாப்பாடு தயார்'
எனக்குப் பசிக்கிறது

ஆஃபீஸ் வேலிச் சுவர்களில்
'வேலை காலி இல்லை'
என் பட்டம் கனக்கிறது

பாதையில் நடக்கையில்
பஸ்ஸில் போகையில்
'வீட்டுக்கு ஒரு
மரம் வளர்ப்போம்'
எவன் வீட்டில்
நான் வளர்ப்பேன்?

கோயில் குளத்தில்
சினிமா அரங்கில்
சிலபல விழாவில்
'எச்சில் துப்பாதே'
இந்தியா வெங்கும்
துப்புவேன்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

சுட்டி சந்தா விபரம் :

- சுட்டி ஒவ்வொரு மாதமும் தவறாமல் முதல் தேதி வெளிவருகிறது.
- 12 இதழ்கள் அஞ்சலில் பெற சந்தா ரூ 3-00 மட்டுமே.
- எல்லாத் தொடர்புகளுக்கும் : ஆசிரியர் குழு, 'சுட்டி'

1494, அண்ணா நகர், சென்னை-600 040

சுட்டி முன் இதழ்கள் :

இதழ் எண்கள் 1 முதல் 8, 10, 11, 14, 16, 17, 19, 21, 22, 26 தவிர பிற இதழ்கள் யாவும் கிடைக்கும். பெற விரும்புவோர் இதழுக்கு 25 காசு வீதம் அஞ்சல் தலைகள் அல்லது பண விடை (M.O.) அனுப்பினால் எங்கள் செலவில் அவை உங்களை அடையும்.

சுட்டி விற்பனையாளர்கள் :

சுட்டி இன்னும் விற்பனையாகாத எல்லா இடங்களிலும் தேவை. எளிய விதிமுறைகள், தரமான கமிஷன் சுட்டியின் கொள்கைகளில் ஆர்வம் கொண்ட வாசகர்களுக்கு முன்னுரிமையுண்டு.

சுட்டி இலவசம் :

சுட்டியைப் படிக்காத நண்பர்கள் இருப்பின் அவர்களுக்குச் சுட்டியை எங்கள் செலவில் இலவசமாக அறிமுகப்படுத்தலாமே சுட்டியை நிச்சயம் வரவேற்கக் கூடியவர் எனில், அவர் முகவரியை தாருங்கள். உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் அவருக்குக் கிடைக்கச் செய்கிறோம்.

ஒருவர் எவ்வளவு நண்பர்களின் முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சலட்டையில் எழுதி அனுப்பலாம்.

சுட்டியில் விளம்பரம் :

செய்து பயனடையுங்களேன். மாதந்தோறும் பல்லாயிரக்கணக்கான விழிப்பான வாசகர்கள் சுட்டியைப் பார்க்கிறார்கள்; பரிமாறுகிறார்கள்; விவாதிக்கிறார்கள். பலரும் பாதுகாக்கிறார்கள் நல்ல விளம்பரங்களுக்கு உரிய பத்திரிகை சுட்டி!

சுட்டியில் மலிவு வரி விளம்பரமும் செய்யலாம். வரி விளம்பரங்களுக்குக் கட்டணம் வரிக்கு ரூ5 மட்டுமே.

✷ மது, சிகரெட்டு, பெண்களைப் போகப் பொருளாகக் காட்டி விற்பனை செய்யும் கவர்ச்சி விளம்பரங்கள் போன்றவை சுட்டியின் வெளியிடுவதற்கில்லை.

சுட்டி இம்மாதம் வந்து சேரவில்லையா?

ஒவ்வொரு மாதமும் முதல் தேதிக்குள் கிடைக்குமாறு சந்தா தாரர்களுக்கு சுட்டி அனுப்பப்படுகிறது. சந்தா முடிய ஒரு மாதம் முன்பும், சந்தா முடியும் மாதமும் (உடன் பணவிடை தாளும் இணைக்கிறோம்) அஞ்சல் உறையின் மேல் உங்களுக்கு அறிவிப்புச் சீட்டு ஒட்டப்படுவதைக் கவனிக்க மறவாதீர்கள். அப்படியும் சந்தா அனுப்பாதோர்க்கே சுட்டியை நிறுத்த நேர்கிறது.

சந்தா முடிய காலமிருந்தும் 15 தேதிக்குள் சுட்டி கிடைக்கப் பெறாதவர்கள் சந்தா எண் குறிப்பிட்டு (மறந்தால், பெயர் முகவரி) எழுதினால் மீண்டும் ஒருமுறை அனுப்புகிறோம். சில சமயம் அஞ்சலில் தவறுவது என்ன [illegible] எதையும் தவிர்க்க முடியாதிருக்கிறது.

FREE E- BOOKS , www.thamizham.net.,

துர்வாசருடன் பேட்டி

✳ பத்திரிக்கை மற்றும் எழுத்துத்துறையில் உங்களுடைய குரு யார்?

ஒன்றும் தெரியாமல் இருந்த என்னை அனைத்து ஆதரவும் காட்டி பத்திரிகை மற்றும் எழுத்துத்துறை நுட்பங்களை எனக்கு முதன்முதலாகக் கற்றுக் கொடுத்தவர் திருமிகு வல்லிக்கண்ணன் அவர்கள். இராமச்சந்திரன் என்கிற எனது பெயரை மாற்றி வண்ணநிலவன் என்று சூட்டி என் கையில் எழுது கோலைக் கொடுத்தவரும் அவரே. தினந்தோறும் நான் பேனாவைத் திறக்கும் போது மானசீகமாக அவரை ஒருமுறை வணங்கி விட்டே எழுதத் தொடங்குகிறேன்.

✳ நமது பத்திரிகைகளின் முக்கிய நோக்கம் யாது?

பணம் சம்பாதிப்பது என்பதைத் தவிர வேறொரு நோக்கமும் இவைகளுக்குக்கிடையாது. மனித பலவீனங்களைப் பயன்படுத்தி செக்ஸ் விகாரங்களைச் சொல்லி, காசு சேர்க்கிறார்கள் பத்திரிகை நடத்துபவர்கள். உங்கள் சுட்டியைப் போல ஒரு பத்திரிகையைத் தொடங்கினால், பல லட்சக்கணக்கான பிரதிகள் விற்றுக் காசு கொட்டோ கொட்டுவென்று கொட்டினால் நாளையே இது மாதிரி ஒரு பத்திரிகையைப்போட்டிப்போட்டுக் கொண்டு இன்றைய ஆபாச பத்திரிகைகாரர்கள் தொடங்கி விடுவார்கள்.

✳ தற்போது நீங்கள் ஒரு பெரிய பத்திரிகையை சார்ந்திருக்கிறீர்கள். சிறு பத்திரிகைகளின் மீது உங்களுக்கு உடன்பாடு உண்டா?

நிச்சயமாக, சிறு பத்திரிகைகளின் மீது எப்போதும் எனக்கு உடன்பாடு இருந்ததில்லை. 50 பிரதிகள் அச்சடித்து 5 வாசகர்கள் படித்துக் கொண்டிருக்கும் இச்சிறு பத்திரிகைகளால் எக்காலத்திலும் எத்தகைய சாதனைகளையும் நிகழ்த்தி விட முடியாது. நான்கு பேர்கள் கூடி உட்கார்ந்து கொண்டு வள வள வென்று பேசிக் கொண்டிருப்பதைத் தவிர வேறொன்றும் இவர்களால் செய்து விட முடியாது.

FREE E- BOOKS , www.thamizham.net.,

சாதனைக்களைச் செய்ய வேண்டுமானால் அது பெரிய பத்திரிகைகள் மனது வைத்தால் மட்டுமே முடியும். இதில் நான் நம்பிக்கையுடையவனாக இருக்கிறேன்.

✷ சமீபத்தில் துக்ளக்கில் துர்வாசர் என்ற பெயரில் தமிழ் பத்திரிகைகளை, திரைப் படங்களை, கிழி கிழி என்று கிழித்தீர்கள். இதன் எதிரொலி என்ன?

ஒன்றும் இல்லை. முதலில் நான் ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். துர்வாசர் என்ற பெயரில் வெளி வந்த தொடர் கட்டுரையில் ஆசிரியர் குழுவின் பலரது கருத்துக்களும் இடம் பெற்றிருந்தன. இதனால் ஒரு பயனும் விளையவில்லை முதலில் இதை யாரும் சீரியஸ்ஸாகவே எடுத்துக் கொள்ளவில்லை நம் மக்களிடம் எல்லாவற்றிலும் பொறுப்பு இருக்கிறது. ஆனால் இந்த சமூகத்தின் மீது துளிக்கூட பொறுப்பு இல்லை. ''தமிழன் என்று சொல்லடா! தலை குனிந்து நில்லடா!' கட்டுரைத் தொடர் துக்ளக்கில் முடிவடையும் போது, ''குமுதம்'' போன்ற மசாலாப் பத்திரிகைகள் சர்குலேஷனில் பயங்கர அடி வாங்கியிருக்க வேண்டும். ஆனால் துரதிஷ்டவசமாக அப்படியேதும் நிகழ்ந்து விடவில்லை. நமது மக்களுக்கு இன்னும் பொறுப்புணர்ச்சி வரவில்லை என்பதைத் தான் இது காட்டுகிறது

✷ ஆரம்பத்தில் குறிப்பிட்ட சில நபர்களின் பெயரை குறிப்பிட்டு பலமாக விமர்சித்த ''துர்வாசர்'' எதிர்ப்புகளுக்கு பின்னால் பயந்து போய் பொதுவான நேரத்தில் விமர்சித்து நழுவி ஒடியதேன்?

நாங்கள் யாருக்கும் பயப்படவில்லை. நாங்கள் திட்டமிட்ட படிதான் சரியாக செய்தோம். நீங்கள் கூறியபடி நாங்கள் பயந்தாங்கொள்ளிகளாக இருந்தால் ''துக்ளக்'' போன்ற ஒரு பத்திரிகையை நடத்திக் கொண்டிருக்க முடியுமா?

இன்னொன்றும் சொல்கிறேன். ''சீப் ஜெர்னலிசம்'' என்று கூறுவார்களே, அது உங்களிடமும் உங்கள் பத்திரிகையிடமும் (சுட்டி) நிறைய இருக்கிறது. குறைகளை மட்டுமே சுட்டிக் காட்ட முற்படக் கூடாது? நிறைகளையும் சொல்ல வேண்டும். நல்ல நோக்கத்தோடு நடத்தப்படும் சுட்டிப் பத்திரிகையில் இக்குறைபாடு இருப்பது வருத்தத்திற்குரியது.

—சி. இராமன்

(தொடரும்)

FREE E- BOOKS , www.thamizham.net.,

கூலிக்கார டால்ஸ்டாய்

எஸன்கி ரயில்வே நிலையத்தில் டால்ஸ்டாய் நின்று வேடிக்கை பாத்துக் கொண்டிருந்தார் புகைவண்டியில் உட்கார்ந்திருந்த ஓர் இளம் பெண், டால்ஸ்டாயை ஒரு கூலிக்காரர் என்று நினைத்து இவ்வாறு சொன்னாள்:

''யேய், கிழவனாரே, ரயில் புறப்படப் போகிறது. சிற்றுண டிச்சாலையில் என் கணவர் இருக்கிறார். ஓடிப்போய் அழைத்துக் கொண்டு வா; கூலி தருகிறேன்''

டால்ஸ்டாய் தயங்கவில்லை. ஓடிப்போய், அவளது கணவனைக் கையோடு அழைத்து வந்தார். கூலி, பத்து கோபெக்ஸ்கள்! அமைதியாகப் பெற்றுகொண்டார்.

அவர் அறிஞர் டால்ஸ்டாய் என்று அறிந்தவுடன் அவள் திடுக்கிட்டுப்போனாள். மனம் வருந்தி மன்னிப்புக் கேட்டாள். டால்ஸ்டாய்சிரித்தபடி சொன்னார்:''சரிதான், பத்து கோபெக்ஸ்களை தந்திரமாகத் திருப்பி வாங்கிவிடலாம் என்று பார்க்கிறாய். இது நான் வேலை செய்து பெற்ற கூலி. அதைத் திருப்பித்தர மாட்டேன்.

அன்னம் விடுதூதில யசோதரா

FREE E- BOOKS , www.thamizham.net.,

"பொன் நகை வேண்டாம் புன்னகை ஒன்றே போதுமே" என்றால் யார் கேட்கிறார்கள். பெண்களின் இந்த நகை மோகத்தை நன்கு பயன்படுத்திக் கொண்டு, கொள்ளையடிக்கிறார்கள் கவரிங் நகைக்காரர்கள்; சமுதாயத்தில் செல்வந்தர் வீட்டுப் பெண்கள், பாவம் 20 சவரன் 50 சவரன் நகை மூட்டைகளைக் கழுத்தில் சுமக்கிறார்கள். அவர்களைப் பார்த்து ஏழைகளும் காப்பி அடிக்கிறார்கள். அதனால் கவரிங் நகைக்காரர்களுக்குக் கொண்டாட்டம்.

கவரிங் நகைத் தயாரிப்பில் உத்திரவாதமாக நல்ல முறையில் வியாபாரம் செய்பவர்களும் எங்கோ அருமையாக இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் பெரும்பாலான கம்பெனிகள் தங்கம் என்று சொல்லிப் போலியான ஒருவித மஞ்சள் வண்ணத்தை ஏற்றி ஏமாற்றி விற்று விடுகிறார்கள்.



இரும்பு செம்புக் கம்பிகளால் நகைகள் செய்து அவற்றின் மீது தங்கக் கரைசலை மலிவான முறையில் தயாரித்து மிகமிக மெல்லிய கோட்டிங் கொடுக்கிறார்கள், 1 மில்லிகிராம் தங்கக் கரைசலில் 10000 ரூ பெறுமானமுள்ள கவரிங் நகை தயாரிக்கலாம். இந்தக் கொள்ளை லாபத்தை பொதுமக்களும் அரசும் அறிந்து கொள்ள வேண்டும். 1 வருஷம் உத்திரவாதம் என்பார்கள். ஆனால் ஒரே வாரத்தில் தண்ணீரில் போட்டதும் பல்லிளிக்கும். பிறகு புளி போட்டுத் தேய்க்க வேண்டியது தான்!

தங்கக் கரைசலில் பல்வேறு அமிலங்கள் கலக்கப்படுவதால் அவை உடம்பில் படும் இடங்களில் ஒவ்வாமை (Allergy) காரணமாகப் புற்றுநோய் தோன்றவும் வாய்ப்பு உண்டு

எனவே கவரிங் நகை உற்பத்தியை ஒரு வரையறைப் படுத்த அரசு சட்டம் இயற்ற வேண்டும் என்று கேட்பது நியாயம் தானே!

—கப

FREE E- BOOKS , www.thamizham.net.,

பத்திரிகை பின்னணி

ஒருநாள் மாலைப் பொழுது. என் நண்பருடன் உரையாடிக் கொண்டிருந்தேன். அப்போது பரவலாக விற்பனையாகிக் கொண்டிருந்த ஒரு முற்போக்கு பத்திரிகையைப் பற்றிய பேச்சு வந்தது. நண்பர் கேட்டார்: "இந்தப் பத்திரிகையைப் பற்றி ஏதேனும் உங்களுக்குத் தெரியுமா? பின்னணி என்னவாக இருக்கும்?"

இந்தக் கேள்வியைக் கேட்பவர்கள் பெரும்பாலும் முற்போக்கு சிந்தனை உள்ளவர்கள் (அல்லது அப்படி சொல்லிக் கொள்வோர்) தான். நான் சொன்னேன்: "முற்போக்கு பத்திரிகைகள் அனைத்துமே ஏதோ ஒரு பின்னணியுடன் தான் வெளிவர வேண்டுமென எப்படி எதிர்பார்க்கிறீர்கள்? முற்போக்கு சிந்தனையுள்ள தனி மனிதன் அல்லது சிலர் சேர்ந்த குழு கட்சி, அமைப்பு இவைகளைச் சாராமல் ஏன் பத்திரிகை நடத்தக் கூடாது? ஏன் நடத்த முடியாது?"

பலத்த பின்னணியுடன் மசாலாப் பத்திகைகளும், தனி மனிதனால் முற்போக்கு பத்திரிகைகளும் வெளிவரலாம் என்பதை ஏனோ இவர்கள் எண்ணிப்பார்க்க மறுக்கிறார்கள்.

நல்ல கருத்துக்கள் எங்கிருந்து வந்தாலும் அதை வரவேற்பதை விட்டுவிட்டு அது எங்கு இருந்து வருகிறது? பின்னனி என்ன? என்பது பற்றி பூதக்கண்ணாடி கொண்டு ஆய்வு செய்துக் கொண்டிருப்பது இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற மூடப்பழக்கம். இந்த அறியாமை அகற்றப் படவேண்டும்.

—இளமுருகு

'புதிய பாடம்'

ஓ ஆசிரியர்காள்!
அந்தப்
பழைய அட்லாசை
கிழித்துப் போடும்...
மாணவர்களுக்கு
பூகோளம் தெரிய வேண்டு
மானால்
வெளி மாநில
லாட்டரிச் சீட்டுகளை
வாங்கித் தாரும்!
அவர்களுக்கும்
பூகோளம் புரியும்,
அரசுக்கும்
பொருளாதாரம் பெருகும்...

மாம்பலம் ராமமூர்த்தி

FREE E- BOOKS , www.thamizham.net.,

திரையுலகப் பிரமுகர்கள் 3

இயக்குநர் கே.பாலசந்தர்

இயக்குநர் பாலசந்தர் பிறந்த தஞ்சைத் தரணி நில வளமும், கலைவளமும் கொண்ட பிரதேசமாக மட்டுமில்லை; இன்னொரு இருண்ட பகுதியும் இந்த மண்ணுக்கு உண்டு. இது பாலசந்தருக்கு தெரியாமல் இருந்திருக்க முடியாது, அல்லது அவைகளைப் பற்றி கேள்விப்படாமலாகிலும் இருந்திருக்க இயலாது. தாஜ்மகாலின் எழிற்கோலத்துடன் அதன் சிற்பியின் சோகமுடிவும் இழைந்திருப்பது மாதிரி தஞ்சை மாவட்ட பூமியின் இன்னொரு பகுதி இரத்தத்தாலும், வியர்வையாலும் அபிஷேகிக்கப்பட்டிருக்கிறது.

கடுமையான சுரண்டலும், கொடூரமான தண்டனைகளும் அளவுக்கு மீறிய ஜாதி வெறியும் இங்கே தலைவிரித்தாடின. நிலமான்ய அநியாயங்களின் உச்சக்கட்டத்தின் போது இவரது இளமைப் பருவம் கழிந்தது என்றால் தவறாகாது. சமூக ரீதியான அடக்குமுறைகள்-பொருளாதார ரீதியான மோசடிகள்-அரசியல் ரீதியான அடிமைத்தனங்கள் அனைத்தும் அம்மாவட்டத்து அரிஜனங்களுக்கும் ஏழை எளிய விவசாயிக் கூலிகளுக்கும் மட்டுமே, ஏகபோகமானவை. ஆப்பிரிக்க நீக்ரோக்களின் அவலங்களின் நகலானவை. உயர் ஜாதியினரின் வீதிகளில் செருப்புடன் நடக்கக் கூடாது. முழங்காலுக்குக் கீழே வேட்டிகள் தழையக் கூடாது. இப்படி சமூக அடிமைத்தனங்கள் ஒருபுறம். நாள் முழுக்க மாடாக இருந்து உழைக்க வேண்டும். காலம் பூராவும் நாயாக இருந்து சேவகம் புரிய வேண்டும். வீசியதை வாங்கிக் கொண்டு வாய்மூடிக் கிடக்க வேண்டும். விடுமுறை கிடையாது. வெள்ளைச் சோறு என்பது விழாக் காலத்திலும் கிடைக்காது. வீட்டுப் பெண்கள் உட்பட வாழ்க்கையில் எதுவுமே சொந்தம் கிடையாது.

FREE E- BOOKS , www.thamizham.net.,

கூலியை உயர்த்திக் கேட்க முடியாது. கொடுமையை எதிர்த்து நிற்க முடியாது. அப்படிக் கேட்கத் துவங்கிய காலகட்டத்தில் தான் பாலசந்தர் வாழ்ந்தார். 100 வேலை, 1000 வேலி என்ற நிலத் திமிங்கிலங்கள் ஒருபுறம். ஒரு வேளை சோற்றுக்குக் கூட வழியில்லாமல் வாழ்நாள் பூராவும் கொத்தடிமைகளாய் காலம் கழிக்கும் விவசாயக் கூலிகள் மறுபுறம். இந்த இரண்டுக்கும் இடைப்பட்ட குடும்பத்தில் தோன்றியதாலோ என்னவோ பாலசந்தர் கலைத்துறையிலும் இடையிலேயே நின்று விட்டார் என்பது தான் வருத்தமான விஷயம். நிலப்பிரபுத்துவத்தின் வளர்ச்சிப் போக்கான முதலாளித்துவ அமைப்பின் பிரதி நிதியாகவே, வளரத்துவங்கினார் பாலசந்தர். அவரது கலைப் படைப்புகளின் வேர்கள் புர்ஷ்வா சிந்தனைக் களத்திலேயே முளை விடத் துவங்கியது.

தஞ்சை மாவட்டத்து நிலப்பிரபுத்துவத்தின் கொடுமை களை இங்கே இவ்வளவு விவரமாக எழுதியதற்குக் காரணம் திரு. பாலசந்தர். தம்மை சுற்றி இத்தனை சித்திர வதைகளும், கொடூரங்களும் நிகழ்ந்திருந்த போதிலும் அவைகளை இன்று வரை எந்தப் படத்திலும் பிரதிபலிக்கா மல் போய் விட்டார் என்பதை சுட்டிக் காட்டத்தான்.

சாதிவெறி, மதப்பூசல், கடவுள் கொள்கை, போலீஸ் கொடுமை போன்றவை காவிரி மண்ணின் வண்ணத்தை மாற்றியது. இவைகளும் பாலசந்தரை எந்த விதத்திலும் பாதித்ததாகத் தெரியவில்லை. இவரது இளமைக் காலத்தில் எந்த அளவு ஆத்திகம் ஆதிக்கம் செலுத்தியதோ, அந்த அளவிற்கு-அதற்கு ஈடாக-நாத்திகமும் புதாகரமாகக கிளம்பியது. பெரியாரின் கடவுள் எதிர்ப்புக் கொள்கை வெகு வேகமாகப் பரவியது. இந்த இரண்டு கருத்துப் போக்குகளில் பாலசந்தர் எதையும் அச்சமில்லை அச்ச மில்லைக்கு முன்பு பிரதிபலிக்கவே இல்லை. அச்சமில்லை அச்சமில்லையில் கூடக் கடவுளை நம்புகிறவன் காட்டு ராண்டி என்ற அவர் வாசகத்தை விமர்சனமில்லாமல் வெறுமனே சுட்டிக் காட்டியதோடு நின்று விட்டார் விடுதலைப் போராட்டத்திற்கு முன்பும் சரி பின்பும் சரி, தேசிய இயக்கம் ஒருபுறமும், திராவிட இயக்கம் மறுபுறமும்

FREE E- BOOKS , www.thamizham.net.,

தஞ்சை மண்ணில் எதிரும் புதிருமாக வளர்ந்துள்ளன. இன்னொரு புறமோ விவசாயக் கூலிகளின் வர்க்கப் போராட்டத்தின் விளைவாக கம்யூனிய இயக்கம் தழைக்கத் துவங்கியது. மறுபுறமோ இந்திக்கு எதிரான மொழிப் போராட்டம் உச்சநிலைக்குச் சென்றது. இவைகளை பாலசந்தர் ஜீரணித்துக் கொண்டாரா? எந்த கருத்தை ஏற்றுக் கொண்டார்? எதை நிராகரித்தார்? சாதி-மொழி தேசியம்-திராவிடம்-போன்ற கடும் போராட்டங்களில் எதையும் இவரது படங்கள் பிரதிபலிக்கவில்லை.

முற்றிலும் வேறு திசையில் பயணம் செய்யத் துவங்கின. இவைகளின் மூலம் திராவிட இயக்கமும் பிரதிபலிக்கவில்லை. தேசிய உணர்ச்சியும் ஊட்டப்படவில்லை. பொருளாதார சுரண்டலுக்கு எதிரான கோபாவேசமும் கிளம்பவில்லை. ஒடுக்கப்பட்ட மக்களை ஒன்று திரட்டவும் வரவில்லை. ஆனால் 20 ஆண்டுகளுக்குபிறகுதான் தண்ணீர் தண்ணீரில் பாலசந்தரால் எடுத்துக் காட்ட முடிந்தது. இதிலும் கூட பல முரண்பாடுகள் இருந்தன. ஆயினும் இவரது படங்கள் புதுமையை நிகழ்த்தின என்பதை மறுக்க முடியாது. ஆனால் அதே நேரத்தில் இவை திரையிலும் வெளியிலும் புரட்சியை நிகழ்த்தியதா என்பது தான் நம் முன் உள்ள கேள்வி.

—டி. எஸ். ரவீந்தரன்

பட்டதாரிக் கனவுகள்!

நாங்கள்
கனவுகளை
வெறுக்கிறோம்!
காரணம்,
கனவுகளில் கூட
பசியுடன்!
வேலையில்லாமல் அலை
கிறோம்!

—பொன் சித்ரா

புதுக்கவிதை

கவிஞன்
உரை நடை எழுதவும்
உரை நடையாளன்
கவிதை எழுதவும்
தொடங்கியதால்
இந்த பூமியில் பூத்த
புதுமலர்க் காடு

—திருப்பரங்குன்றம்,
பாலகிருஷ்ணன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

தலைநகரில் ரிக்ஷா ஓட்டும் பெண்

டெல்லி மாநகரின் தெருக்களிலே, கொளுத்துகின்ற வெயிலானாலும், கொட்டுகின்ற மழையானாலும், ஒரு பெண் சைக்கிள் ரிக்ஷா ஓட்டுகின்ற காட்சியை டெல்லியில் பலரும் பார்த்திருக்கலாம். ஆனால் நமக்கு அது ஒரு கேள்விப்படாத நிகழ்ச்சி.

36 வயதான ஹஸ்ரா பேகம் 7 வருடங்களுக்கு முன் கல்கத்தாவிலிருந்து டெல்லி வந்து சேர்ந்தார். கணவரும் குழந்தைகளும் பங்களாதேஷ் கலவரத்திலே கொல்லப்பட்டு விட்டனர். அனாதையான ஹஸ்ராவுக்கு ஏழ்மையும், பசியும்தான் துணையாக இருந்தன. வேலைதேடிப் பல வாரங்கள் அலைந்த பின் இறுதியாக சைக்கிள் ரிக்ஷா ஓட்டும் வேலையை மேற்கொண்டார். உடலுழைப்பு அதிகமாகத் தேவைப்படும் வேலை இது என்றும், 2 வாரங்களுக்கு மேல் இதில் ஹஸ்ராவால் நிலைத்து நிற்க முடியாது என்றும் பலரும் நினைத்தனர். ஆனால் சலிப்பின்றி கடந்த 7 வருடங்களாக ரிக்ஷா ஓட்டுவதைத் தொழிலாகக் கொண்டிருக்கிறார் இப்பெண்மணி.

இத்தொழிலில் தொல்லைகள் இல்லாமல் இல்லை. வம்பு செய்வதற்காகவே சிலர் ரிக்ஷாவில் ஏறுவதுண்டு. ஆண் ரிக்ஷா தொழிலாளர்கள் கேலி செய்வதுண்டு. இருந்த போதிலும் தைரியமாகத் தொடர்ந்து ரிக்ஷா ஓட்டி வருகிறார் ஹஸ்ரா பேகம்.

ஆணுக்கு ஈடாக கடுமையான உடலுழைப்புத் தேவைப்படும் ரிக்ஷா இழுக்கும் வேலையையும் ஒரு பெண் செய்ய முடியும் என்று நிரூபித்திருக்கிறார் ஹஸ்ரா. 37 வருட சுதந்திரத்திற்கு பின்னும் இத்தகைய வேலையை செய்துதான் பிழைக்க வேண்டும் என்ற நிர்பந்தம் பெண்களுக்கு இருப்பது நம்மை தலைகுனிய வைக்கிறது.

நன்றி சிந்தனை

FREE E- BOOKS , www.thamizham.net.,

கேட்க வேண்டிய கேள்விகள்

✳ பாலுணர்வு தூண்டும் ஆபாசப் பத்திரிகைகள் பெருகி வருகின்றனவே, அதற்கு என்ன செய்யலாம்?

பெற்றோர்களும் தார்மீக உணர்வு கொண்டோரும் சற்றே விழிப்புடன் இருந்தால் ஆபாசப் பத்திரிகைகளை ஒழித்திடலாம். பெண்களை போதைப் பொருளாக்கிப் பக்கத்திற்குப் பக்கம் நிர்வாண கோலம் தந்து 2 ரூ. விலையில் 'ஹிப்பி' என்ற மாதமிருமுறை இதழ் எவவித தயக்கமும் இன்றி கூடலூர் கடைகளில் விற்பனையாகி வருகின்றன. இப்படிக் கேரளாவிலிருந்து தமிழ்நாட்டில் ஊடுருவி வரும் ஆபாச புத்தகங்களைத் தடைசெய்யக் கோரி கூடலூர் காவல் நிலையம் முன் தர்ணா நடத்துகிறார்கள் இதற்காகப் போராடிக் கொண்டு வருகிறது கூடலூர் முற்போக்கு வாலிபர் முன்னணி அவ்வியக்கத்தைச் சார்ந்த தோழர் தியோர்டரின் கரங்களைப் பலப்படுத்துவோம், வாரீர்.

✳ சுட்டி தமிழ்ப் பத்திரிகை தானா என்று ஐயம் வருகிறது. ஆங்காங்கே ஏராளமான க், ச், ஒற்றுப் பிழைகள். 'வேண்டாம்' என்ற இலக்கணப் பிழையான சொல்லைக் கூச்சமில்லாமல் பயன்படுத்துகிறீர்கள். போதாக் குறைக்கு 43 ஆம் சுட்டியின் அட்டையிலேயே எலுமிச்சையைத் தவறாக எழுதியிருக்கிறீர்கள். சுட்டியாரே! கொஞ்சம் தமிழ் படித்துக் கொள்ளும்.

சுட்டிக் காட்டியதற்கு நன்றி. வருமொழியும் நிலைமொழியும் இரண்டும் தமிழ்ச் சொல்லாக இருந்தால் அங்கே கட்டாயம் க், ச் ஒற்று போடுவோம். தமிழில் தான் ஏராளமான வடசொற்கள் இருக்கின்றனவே. அதனால் அங்கெல்லாம் போடுவதில்லை.

யார் சொன்னது வேண்டாம் என்பது பிழையான சொல் என்று? ''ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்'' என்று பழமொழியிலேயே இடம் பிடித்துக் கொண்டிருக்கிறது. தவிரவும் 'வேண்டாம்' என்பது 'வேண்டாங்க' என்னும் உலக வழக்குச் சொல்லின் கடைக்குறை என்க. →

FREE E- BOOKS , www.thamizham.net.,

எமக்கு வந்தவை

தென்புலம் : மாத இதழ் ஆசிரியர் : கோப்பூர் திரு வேங்கடம் 16, அமிர்தலிங்க சாமி சன்னதித் தெரு, வேலூர், வ.ஆ.மா. தனியிதழ் ரூ. 1/. ஆண்டு சந்தா: குறிக்கப்படவில்லை.

பத்தாவது ஆண்டு விழா மலர் : M/s தமிழ் இசை சங்கம், ராஜா முத்தையா மன்றம், மதுரை.625 020. விலை : குறிக்கப்படவில்லை.

Good Bye : (A prose one act play) By Parambai Bharani. M/s Pudumai Pathippagam, Paramakudi-623707. Price Rs. 4/-

எல்லோரும் பழக எளிதான யோகாசனம் 14 ! (6 00) யோகி எஸ். ராஜன், M/s பூங்கொடி பதிப்பகம், 14, சித்திரைக்குளம் மேற்கு வீதி, சென்னை.600 004.

லிங்கனின் வாழ்வினிலே : (2.50) அ. திலகவதி

காலத்துக்கு ஒரு நாள் முந்தி : (4.50) தமிழன்பன்

M/s பூம்புகார் பிரசுரம் பிரஸ், 63, பிராட்வே, சென்னை.600 001.

எரிகின்ற இலங்கையில் எழுகின்ற ஈழம் : (8 00) மயிலைநாதன், M/s மயிலான் பதிப்பகம், 7, எம். கே. அம்மன் கோயில் தெரு, மயிலாப்பூர், சென்னை.600 004.

இப்படிக்கு : (கவிதைத் தொகுப்பு ரு 3.00) வசீகரன் M/s மெய்ப்பொருள் பதிப்பகம், ஆலத்தூர், (அஞ்), கவுந்தப்பாடி வழி 638455.

வேலையற்ற இளைஞர்களுக்கு ஓர் ஆறுதலான செய்தி

தமிழகத்தின் சில மாவட்டங்களில் சொந்தமாகத் தொழில் தொடங்க அரசு உதவித்தொகை அளிக்க முன்வந்துள்ளது இந்த உதவித்தொகை சில தொழில்களுக்கு மட்டுமே. ரூபாய் 88 கோடி அளிக்கப்பட்டுள்ள தொகையில் மூன்றில் ஒரு தொகை அச்சகம் ஆரம்பிக்க இதுவரை தரப்பட்டுள்ளது. புது அச்சகம் தொடங்குவதற்கான அனைத்து உபகரணங்களும், ஆலோசனைகளும் பெற நம்பிக்கையான இடம்: ரங்கா டைப் பௌண்டரி, 73, ஹண்டர்ஸ் சாலை, வேப்பேரி சென்னை-600 112 பேசி: 37999, 664293.

விளம்பரம்

அடுத்து எழும் + இச்சை என்பதே எழுமிச்சை என்று போலியாகியது. எலுமிச்சையின் சாறு பலம் தருவது, ஊக்கம் (STIMULANT) தருவது என்ற பொருளில் தான் எழுமிச்சை என்ற ஆக்கச் சொல்லை நம் முன்னோர்கள் படைத்துள்ளார்கள். சாப்பிட்டுப் பாருங்கள். மேன்மேலும் சாப்பிட வேண்டும் என்று இச்சை எழும்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

புகைகுடிக்காமல் இருக்க இதோ ஒரு புதிய வழி

நெப்ராஸ்கா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த உளவியல் (PSYCHOLOGIST) மருத்துவர்களாகிய ஏ. ஜேம்ஸ் பிகஸ், டேவிட் டவுடன் ஆகிய இருவரும் 88 புகைஞர்களைப் பல காலம் தொடர்ந்து ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு கீழ்க் கண்ட கண்டுபிடிப்பைச் செய்துள்ளனர்.

புகை அதிகம் குடிப்பவர்களுடைய உடலில் நிகோடின் என்னும் அமிலம் அதிகம் சேர்ந்து வருகிறது. அவர்கள் வெளியேற்றும் சிறுநீர் அதிகம் அமிலத்தன்மை பெற்றதாக இருக்கும். மாற்றுக் குறையாத விஷமாகிய நிகோடினை அவர்கள் உடல் அதிகம் வெளியேற்றுவதால் புகை வேட்கையும் இவர்களுக்கு அதிகமாக இருக்கும். இப்பேர்பட்டவர்களுக்கு ஒரு நாளுக்கு 4 கிராம் பைகார்பனேட் (சமையல் சோடா) மாத்திரைகளை தொடர்ந்து கொடுத்துப் பார்த்ததில் அவர்கள் குருதியில் அமிலத்தன்மை குறையக் கண்டார்கள். அதன் விளைவாக புகை குடிக்க வேண்டும் என்ற வேட்கையும் குறைந்து போவதைக் காண முடிந்தது.

அதிகம் இரத்த அழுத்தம் (High Blood Pressure) உள்ளவர்கள் மட்டும் இந்த பை-கார்பனேட்டை உட்கொள்ள வேண்டாம். எனவே புகைஞர்கள் முதலில் மருத்துவரிடம் இரத்த அழுத்தம் இருக்கிறதா என்பதை சோதித்து அறிந்து ஷி பைகார்பனேட் விழுங்கினால் புகை குடிப்பதை விட்டொழித்து விட முடியும்.



இவர்கள் தான் தமிழர்கள்

காலையில்
அரிசி இல்லை
பருப்பு இல்லை
எண்ணெய் இல்லை
விறகு இல்லை என்று
கணவனுக்கும், மனைவிக்-
கும்
குருஷேத்திரம் நடக்கும்!
மாலையில்
பாக்யராஜ் படத்திற்கு
மனைவியும்
பாரதிராஜா படத்திற்கு
கணவனும்
முட்டி மோதிக் கொண்டு
க்யூவில் நிற்பார்கள்!

—பேராவூரணிகான்முகமது

FREE E- BOOKS , www.thamizham.net.,

நமது சீரக மருத்துவம்

● சீரகம் உணவில் மணத்திற்காக மட்டும் சேர்க்கப்படுவதில்லை. 25க்கும் மேற்பட்ட நோய்களைத் தடுக்க சீரகம் உதவுகிறது. நற்சீரகம், பெருஞ்சீரகம், கருஞ்சீரகம், காட்டு சீரகம், பிளப்பு சீரகம், நட்சத்திர சீரகம், செஞ்சீரகம் என ஏழுவகை உண்டு. நாம் உணவில் பயன்படுத்துவது பெருஞ்சீரகம், நற்சீரகமுமாம்.

● **முக்கிய மருந்துவப் பண்பு:** வாய் நாற்றம் நீக்கும், வாய்ப்புண் குறையும், நாக்குத் தடிப்பு நீங்கும், வாய் ஊறல் தணியும், இருமல் குறையும், தொண்டைக்கட்டு நீங்கும், மலக்கட்டு நீங்கும், மார்பு வலி குறையும், மூச்சுத் திணறல் நீங்கும், சீரணம் ஒழுங்காகும், வயிற்று வலி நீங்கும், சூதக வலி நீங்கும், சீதபேதி குணமாகும், பல் வலி குறையும், எலும்பு பலமடையும், உடல் வறட்சியைப் போக்கும், வியர்வை நாற்றம் நீக்கும், வாந்தி, குமட்டலை நீக்கும், நீர் எரிவை நீக்கும், பித்த மயக்கம், சுரம் தணிக்கும்.

சீரகத்தில் உள்ள சத்துக்கள் விகிதம் (100 கிராமில்)

புரதம்	—	18.7 கி
கொழுப்பு	—	15.0 கி
தாது உப்புக்கள்	—	5.8 கி
கார்போஹைட்ரேட்	—	36.6 கி
சுண்ணாம்பு	—	511 மி.கி
இரும்பு	—	31.0 மி.கி
கரோட்டின்	—	522 மி.கி
நையசின்	—	2.6 மி.கி
வைட்டமின் சி	—	3 மி.கி

● **மூத்திர எரிச்சலுக்கும், குளிர்ச்சிக்கும், அன்றாடம் பயன்படுத்தவும் சீரகநீர் தயாரிக்கும் முறை:** 4 லிட்டர் நீரை கொதிக்க வைக்கவும். கொதித்த நீரை வடிகட்டி, அதில் 50 கிராம் சீரகத்தைப் போட்டு மீண்டும் கொதிக்க வைத்து இறக்கவும். இந்த நீரையே குடிநீராக எப்போதும் பயன்படுத்தினால், மேற்கண்ட பலன்களில் பலவற்றைப் பெறலாம் சிறப்பாக மூத்திர எரிச்சல், சீரணமின்மை இவற்றிற்கு இது சிறந்த குணமளிக்கும்.

—சித்தன்

(அடுத்து: நமது எள் மருத்துவம்)

FREE E- BOOKS , www.thamizham.net.,

2 தூக்கு மேடையில் தோழன் பகத்சிங்

ஆங்கில அரசாங்கம், பகத்சிங் தொடர்பாக, காந்தியிடம் உதவிகேட்டு ஒரு கடிதம் எழுதியது. வைஸ்ராயின் சார்பாக, அரசு அதிகாரி எமர்சன், காந்திக்கு எழுதிய கடிதத்தின் தமிழாக்கம் இதோ :-

இந்திய அரசு,
உள்துறை,
புது தில்லி,
20 மார்ச் 1931

அன்புள்ள திரு காந்தி,

போர்சாத்திலிருந்து (Borsad), மம்லத்தார் (Mamlatdar) வெளியிட்ட துண்டறிக்கை மற்றும் சுற்றறிக்கையின் மொழிபெயர்ப்புகளை உள்ளடக்கிய, தங்களின் இன்றையக் கடிதத்திற்கு நன்றி கூறும் பொருட்டு, இக்கடிதத்தை எழுதுகின்றேன். இந்த விஷயத்தை உள்நாட்டு சின் கவனத்திற்குக் கொண்டுவருவேன்.



பகத்சிங் முதலானோர்க்கு விதிக்கப்பட்டுள்ள தண்டனைகளை நிறைவேற்றுவதால் ஏற்படக்கூடிய ஆபத்து நிறைந்த கொந்தளிப்புகளைப் பற்றி, நேற்று இரவு நாம் உரையாடிக் கொண்டிருந்ததையொட்டி, இன்றிரவு 5-30 மணிக்கு திரு சுபாஷ் சந்த்ரபோஸ் கண்டன கூட்டம் ஒன்றில் பேச விரும்புவதாக, நகரத்தில் கொடுக்கப்பட்டுள்ள அறிவிப்பைத் தலைமை ஆணையர் (Chief Commissioner) எனக்குத் தெரியப்படுத்தியுள்ளார்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

இந்த விஷயத்தில் தங்களின் சங்கடங்களை நான் முழுமையாக உணர்கிறேன்; என்பதோடு, அரசின் சங்கடங்களையும் தாங்கள் உணர்வீர்கள் என எண்ணுகின்றேன். கொந்தளிப்பு மிகுதியாய்ப் போனால், தடுத்து நிறுத்த முடியாமல் போகலாம் என்றாலும், கூட்டத்தை, இந்த நேரத்தில் தவிர்க்கவும், முடியுமானால் தடுப்பு நடவடிக்கை எடுக்கவும், அரசு விரும்புகிறது என்பதையும் தாங்கள் உணர்வீர்கள். இத்தகையதொரு கூட்டம், இன்றிரவு நடைபெறுமானால், அதுவும் குறிப்பாக அனல்தெறிக்கும் பேச்சுக்கள் நிகழ்த்தப் பெறுமானால், மக்களின் உணர்ச்சிகள் அதிகரிக்கும் என்பது பெரிதும் உறுதியாகும். கட்டுப்படுத்த இயலாவிடில், மிகத் தீவிரமான விளைவுகளை உண்டாக்கக் கூடிய, இந்நிலைமைகளைத் தடுத்து நிறுத்தவும் கட்டுக்குள் கொண்டு வரவும், தங்களால் ஆகும் எந்த உதவியையும் அரசு மிகவும் பாராட்டும்.

தங்களின் நேர்மையுள்ள,
(ஒம்)... N. N. எமர்சன்

எம். கே. காந்தி அவர்கள்
1, தரியாகஞ்ச்,
டில்லி.

இக்கடிதத்தின் புகைப்படப் பிரதி தான் மேலே இடம் பெற்றுள்ளது)

இக்கடிதம் மூலம் இரண்டு முக்கியமான விஷயங்கள் புலனாகின்றன. ஒன்று — அரசின் உயர் அதிகாரிகளுக்குக்

FREE E- BOOKS , www.thamizham.net.,

கூட அறிவிக்கப்படாமல், மிக ரகசியமாகப் பாதுகாக்கப்பட்ட, பகத்சிங்கின் தூக்குத் தண்டனை பற்றிய செய்திகளை, 19-03-1931 அன்று இரவே, காந்தியிடம் அரசாங்கம் ரகசியமாகத் தெரிவித்திருக்கிறது. இரண்டாவது—மக்களின் கொந்தளிப்பைத் தடுத்து நிறுத்த உதவி கேட்குமளவிற்கு, காந்தி, ஆங்கில அரசின் நம்பிக்கைக்கு உரியவராய் இருந்திருக்கிறார்.

நம் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க, நம்மிடமே உதவி கேட்கும் ஆங்கில அரசிற்கு, காந்தி என்ன பதில் சொல்லியிருக்க வேண்டும்?

இல்லை...காந்தியின் பதில் நாம் எதிர்பார்க்கிற மாதிரி இல்லை!

(அடுத்த இதழில் காந்தியின் கடிதம்)

பிற்போக்கு அமெரிக்காவின் முற்போக்கு மனிதர்கள்

அமெரிக்காவில் மூடநம்பிக்கை ஒழிப்புச் சங்கம் ஒன்று இருக்கிறது. எண் 13ஐ அமெரிக்கர்கள் துரதிர்ஷ்ட எண்ணாகக் கருதுவதால் இச்சங்கத்தினர் எல்லா நல்ல காரியங்களையும் 13ஆம் எண் வரும்படியே செய்கிறார்கள். 13ஆம் தேதி வரும் வெள்ளிக்கிழமைகளிலேயே கூட்டம் நடத்துகிறார்கள். தொடக்கத்தில் இச்சங்கம் 13 பேர்களாலேயே தொடங்கப் பெற்றது. இப்போது 313 பேர் இதன் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். சமீபத்தில் நடந்த கூட்டத்தின் போது கூட்டம் நடந்த ஹாலில் 13 கறுப்புப் பூனைகளைக் குறுக்கும் நெடுக்குமாகத் திரியச் செய்தார்கள்.

சென்னையில் உங்களின் நம்பகம் வாய்ந்த பிரதிநிதியாய் செயல்பட விரும்புகிறோம். ஆலோசனைக் கட்டணம் ரூ. 5/- உடன் உங்களுக்குச்செய்யவேண்டிய பணிகளின் விவரத்தினை தெரிவிக்க வேண்டிய முகவரி :—

மைதிலி மோகன்,

24, திருவள்ளுவர் தெரு, இராமாபுரம், அம்பத்தூர்,
சென்னை-600 053.

FREE E- BOOKS , www.thamizham.net.,

பெண் சீண்டல்

பெண்களைக் கலாட்டா செய்வது [ஈவ் டீசிங்] என்பது மிகப் பெருகி விட்டது. ரோட்டில் நடந்து செல்லும் பெண்களை பின்னால் சென்று கேலி செய்வது, கடையில் பொருட்கள் வாங்கிக் கொண்டிருக்கும் பெண்களின் அருகில் நின்றுகொண்டு பச்சையாக ஏதாவது அவர்கள் காதுபட பேசி நமட்டுச் சிரிப்புச் சிரித்து தர்மசங்கடப்படுத்துவது' தவிர்க்க முடியாத கூட்ட நெருக்கடியாக இருந்து விட்டால் [கோவில் திருவிழாக்கள், சுற்றுலா பகுதிகள், க்யூக்கள், முக்கியமாக பஸ்களில்] சர்வாங்கமும் உரசலாடி, சகல லீலைகளும் புரிந்து, பூரண உடலுறவு கொள்ளாத ஒன்று தான் குறை என்ற அளவுக்கு செயல் படுவது மிக அதிமாகிக் கொண்டு வருகிறது.

இளைஞர்கள் "பெண்" என்றாலே ஏன் இப்படி எலும்பைக் கண்ட நாய் போல அலைகிறார்கள்? இந்த காய்ச்சலுக்குக் காரணம் என்ன? நம்முடைய பண்பாடு, கலாச்சாரத்திலுள்ள தவறுகள் தான். பெண்ணையும், பெண் சம்பந்தப்பட்ட விஷயங்களையும் 'மர்ம'ப் படுத்தி வைத்திருக்கிறார்கள். மர்மமான எதிலுமே ஆர்வமும், தீவிரமும் அதிகப்படுவது என்பது மனித இயல்பு.

போதாக்குறைக்கு, சும்மாவே ஆடும் பேய்க்கு பூ, சாம்பிராணி போடுவது போல் சினிமாக்காரர்கள், அனுராதா சிலுக்கு என்று சதைக் கண்காட்சிப் பொருட்களை வீதியெல்லாம் சுவற்றுக்குச் சுவர் நிற்க வைத்திருக்கிறார்கள், பத்திரிகைக்காரர்கள் இன்னும் ஒரு படி மேலே போய் இந்த 'திறந்த மேனியாள்' களின் நேரடிப் படங்களுடன் சில 'நீல ஓவியர்' களின் காமவெறியூட்டும் கைவண்ணப் படங்களையும் சேர்த்து வீட்டிற்குள்ளேயே அனுப்பி விடுகிறார்கள்.

சரியான பாலியல் கல்வி அளித்து, இந்த "பெண்" "ஆண்—பெண்" "மர்ம"த்தை தெளிவு படுத்துவதும், சினிமா, பத்திரிகை கிரியா ஊக்குகளின் அபரிமிதமான அட்டகாசத்தைக் கட்டுப்படுத்துவதும் மட்டுமே இளைஞர்களை இந்த கீழ்த்தரமான நடவடிக்கைகளிலிருந்து மீட்பதற்கான சரியான வழியாக இருக்கும்.

—ஜெயராஜ்

FREE E- BOOKS , www.thamizham.net.,

இது பல மருத்துவர்கள் பயன்படுத்தும் ஒரு புதிய உலோகக் கம்பியின் பெயராகும். முன் பற்கள் நீண்டிருந்தால் முகத்தின் அழகு பாதிக்கப் படுவதை நாம் அறிவோம். பெண்களுக்கு என்றாலோ கேட்கவே வேண்டாம் திருமணச் சந்தையில் பெரியதோர் தடைக்கல் லாகவே அது இருப்பதைக் காணலாம்.

இதற்கு முன்பெல்லாம் மேல்பல் வரிசையோடு ஒட்டி எவர்சில்வர் கம்பியை வேண்டிய அளவுக்கு வளைத்துப் பொருத்தி வைப்பார்கள். சுமார் 2 வருட காலம் அந்தக் கம்பியைப் பொருத்தியிருந்தால் தான் பல்லின் துருத்தலில் முன்னேற்றம் காண முடியும். அதுவும் மாதம் ஒரு முறைகூட மாற்ற வேண்டியும் வரலாம்.

ஆனால் தற்போது புதிதாக சந்தைக்கு வந்துள்ள நிடினால் (NITINOL) என்னும் உலோகத்தைப் பயன்படுத்தினால் அது என்றும் நிலைமாறி நிமிர்ந்து விடுவதில்லை. போட்டது போட்டபடியே இருக்கும். இந்தப்புதிய உலோகக் கம்பியைக் கொரட்டினால் வேண்டிய வடிவத்துக்கு வளைத்துப் பிறகு அக்கம்பியை 800 டிகிரிக்கு உயர்த்தி திடீரென 90 டிகிரிக்குக் குறைப்பார்கள். இப்போது அதனை நிமிர்த்த முடியும். அதைப் பல் வரிசையில் வைக்க மெதுவாக அது முன்பு இருந்த வளைவு நிலையை அடைந்து அப்படியே நின்று பற்களின் அமைப்பைப் பாதுகாக்கின்றன. நிடினால் இன்னும் வியாபாரச் சந்தைக்குப்பரவலாக வரவில்லை. வந்தால் பல் மருத்துவர்க்கும் பல் நோயாளருக்கும் கிடைத்தற்கரிய வரப்பிரசாதமாகும்.

புலவர், பாவலர் - தமிழ்நூல் படித்துப் புலவர் பட்டமும், யாப்பு நூல் படித்துப் பாவலர் பட்டமும் வீட்டிலிருந்தே நூல் பார்த்து எழுத வினாத்தாள் வரும். நூலுக்கும் தேர்வுக்கும் முறையே 2 ரூபா - 15, 10 அனுப்ப வேண்டிய முகவரி : இயற்றமிழ் பயிற்றகம், திருவாரூர் வடக்கு

FREE E- BOOKS , www.thamizham.net.,

வங்க முதல்வரின் மகன்

மேற்கு வங்க முதல்வர் ஜோதி பாசு, இந்தியாவின் ஒரே அப்பழுக்கற்ற முதல்வராகக் கருதப்படுகிறார். எளிய வாழ்க்கை முறையுடைய இலட்சிய கம்யூனிஸ்டு அவர்.

அவருடைய ஒரே மகன் சுபப்ரதா பாசு எனும் சந்தன் பணத்தையே முக்கியமாகக் கருதும் முதலாளி.

முதல்வர் இரவு வரை கோப்புகளைப் பார்த்துக் கையெழுத்திடும் அதே நேரத்தில் மகன் வீடியோவில் அமெரிக்கத் திரைப் படங்களைக் கண்டு களிப்பார். அந்நிய நாட்டு சிகரெட்டுகளும், கோல்ஃ ஆட்டமும் இவருக்கு மனம் மகிழ்விப்பவை. ஸ்காட் விஸ்கியைச் சுவைப்பவர்; காக்டெயில் விருந்தில் இரண்டறக் கலந்திருப்பவர்.

சட்டையும் வேட்டியுமாக காட்சியளிப்பவர் ஜோதிபாசு. மகனோ சஃபாரி ஸூட்டில் பெரும் வர்த்தகராகத் தோற்றமளிக்கிறார். மூன்று பெரிய நிறுவனங்களை நிர்வகிக்கும் இவர் ரூ 2 கோடிக்கு வர்த்தகம் புரிகிறார்.

4 வருடங்கள் வேலையின்றி அலைந்தவர் இன்று பெரிய முதலாளி; லட்சாதிபதி.

தனது தனிப்பட்ட செல்வாக்கால் வங்க நிதிக் கழகத்திலிருந்து ரூ 15 லட்சம் கடனுதவி பெற்று 10,000 டன் பிஸ்கட் தயாரிக்கும் பிஸ்கட் நிறுவனம் ஒன்றை நிறுவப் போகிறார் சந்தன். இதனால் 2 பெரிய பிஸ்கட் நிறுவனங்கள் நசிந்து மூடப்பட்டு விட்டன. முதல்வரின் மகன் என்பதால் அவர் அரசு சலுகைகளை தாமதமின்றி பெறுகிறார் என்ற குற்றச் சாட்டை சந்தன் மறுக்கிறார்.

முற்போக்குத் தலைவரின் மகனுக்கு எதிர் காலத்தைப் பற்றிக் கூறும் ஜோதிடப் பத்திரிகை என்றால் கொள்ளை ஆசையாம். இவர் அரசியல் பேசுவதில்லை. தனக்கு மார்க்சியம் என்றால் என்ன என்று கூடத் தெரியாது என்பதைக் கூச்சப்படாமல் ஒப்புக் கொள்கிறார்.

''தந்தை வழியில் மகனும் மார்க்சியப் பாதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று தான் எதிர் பார்க்கவில்லை'' என்று கூறுகிறார் ஜோதி பாசு.

—தகவல்: நிறைமதி

FREE E- BOOKS , www.thamizham.net.,

சு. சமுத்திரத்தின்
சமூகப்பார்வைமிக்க நூல்கள்

சமுத்திரம் கதைகள்	7-25
இல்லந்தோறும் இதயங்கள்	12-30
காகித உறவு	5-75
ஒரு சத்தியத்தின் அழுகை	6-30
வளர்ப்பு மகள்	7-00
வேரில் பழுத்த பலா	12-00
உயரத்தின் தாழ்வுகள்	6-50
நெருப்புத் தடயங்கள்	18-00
புதிய திரிபுரங்கள்	8-25
ஊருக்குள் ஒரு புரட்சி (பரிசு பெற்றது)	9.00

மணிவாசகர் நூலகம்
புத்தகம் வெளியிடுவோர், 89, லிங்கிச் செட்டித் தெரு,
சென்னை-600 001.
போன் : 512996

எந்த ஐயத்திற்கும் பதில்

சுட்டி பதிலளித்த சில கேள்விகள்?

* நான் எந்த மதத்தையும், சாதியையும் சாராமல் இருக்க முடியுமா? சட்டப் பூர்வமான விளக்கம் சொல்லுங்கள்.
* மியூச்வல்ஸ்பில் பணம் கட்டுவது பாதுகாப்பானதா?
* 2 ஆண்டுகளாக மலச்சிக்கலால் அவதிப்படுகிறேன். தீர்க்க வழி சொல்லுங்கள்.
* SITUATIONAL ENGLISH—by Longman — இப்புத்தகம் எங்குக் கிடைக்கும்?
* தூக்கத்தில் தினம் விந்து வெளிப்படுகிறது. இது ஆபத்தானதா?
* நான் ஒரு தொழுநோயாளியைத் தொட்டேன். தீங்கு நேருமா?
* புதிய மாத இதழ் தொடங்கும் வழி முறைகள் என்ன?
* வெளிநாட்டிலிருந்து ஓர் இயந்திரம் தருவிக்க வேண்டும். அதன் வழிமுறைகள் பற்றி விளக்கம் தாருங்கள்.

இது போல உங்கள் ஐயம் எதைப்பற்றியாயினும் இரண்டே ரூபாய் செலவில், பதில் பெறுங்கள். அந்தத்துறை நிபுணர்களிடமிருந்து பதில் பெற்று உங்களுக்குத் தனிப்பட்ட முறையில் அஞ்சலில் அனுப்புகிறோம்

கேள்வி ஒன்றுக்கு ரூ 2-00 வீதம் பணவிடை அல்லது அஞ்சல் தலை அனுப்புங்கள்.

"சுட்டி பதிலாளர்குழு" 1494, அண்ணாநகர், சென்னை-600 040

FREE E- BOOKS , www.thamizham.net.,

ராட்சச கைரேகை

சுவிட்சர்லாந்தில் ஜீன்பியரே பெக்கர் என்ற ஓவியர் ஒரு போலீஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள சுவரில் தன் கட்டை விரல் ரேகையை பெரிய அளவில் சுவர் முழுதும் இருக்குமாறு வரைந்து வைத்து இருக்கிறார். குற்றச் செயலில் ஈடுபடுபவர்கள் தப்ப முடியாது. அவர்களுடைய கட்டை விரல் ரேகை எப்படியும் காட்டிக்கொடுத்துவிடும் என்பதை நினைவுறுத்துவதற்காக இதை வரைந்து வைத்திருக்கிறார்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

நான்தான் மாதவனின் மண்ணீரல் (PANCREAS) பேசுகிறேன்



மாதவனின் அடிவயிற்றில் சிறுநீரகம், குடல் முதலியவற்றின் இடையே ஒரு பெரிய நாயின் நாக்களவு இருந்து கொண்டு விந்தைகள் புரிகின்றன.



இரைப்பையிலிருந்து கீழ்நோக்கி பாயும் உணவுக் குழம்பில் பல்வேறு அமிலங்கள் (ACIDS) கலக்கின்றன. இவையெல்லாம் அப்படியே சென்றால் குடலின் நுண்ணிய சுவர்ப்பகுதி நாசமடையும் இதைச் சமன் செய்வதற்குக் கூடிப் பொருளை (ALKALINE) உற்பத்தி செய்து தள்ளுகிறேன். ஆனால் இது ஒன்றும் அற்புத சாதனை என்று சொல்லி விட முடியாது. மாதவன் சாப்பிடும் பொருள்கள் எல்லாம் அப்படியே ரத்தக் குழல்களில் சென்றால் அவன் உயிருக்கு ஆபத்து. அதனால் இடைவிடாது ட்ரிப்ஸின், அமிலேஸ், லீபேஸ் போன்றவற்றை உற்பத்தி செய்து கொண்டிருக்கிறேன்.

இவற்றைத் தவிர எனக்குப் பெருமை சேர்ப்பது எனது படைப்பாகிய இன்ஸுலினே (INSULIN). மாதவனின் ரத்தத்தில் உள்ள குளுகோஸ் சர்க்கரை சுமார் 5 கிராமுக்கு மேற்படாமல் எனது இன்ஸுலின் பார்த்துக் கொள்கிறது. நான் அங்கே இல்லையென்றால் மாதவனின் ரத்தத்தில் சர்க்கரை அதிகம் நின்று விடுகிறது. அதைச் சிறுநீரகங்கள் வெளியேற்றும் நிலையில் நீரிழிவு நோய் என்கிறார்கள். மாதவன் இனிப்புப் பொருள்களை அதிகம் சாப்பிடாமல் இருப்பது நல்லது.

எனக்கும் சில நோய்கள் வரும். கட்டி தோன்றுதல், வீக்கம் உறுதல், புற்றுநோய் வருதல் போன்றவை வரலாம். அவற்றை பேரியம் கூழ் கொடுத்துத்தான் கண்டுபிடிக்க வேண்டும். →

FREE E- BOOKS , www.thamizham.net.,

தாமிளி

இதுதான் கி.மு. நூற்றாண்டுகளில் பாரதத்தில் வழங்கிய பல்வேறு எழுத்துக்களைக் கூறும் போது தமிழ்நாட்டில் வழங்கிய எழுத்துக்குச் சமணர்கள் சூட்டிய பெயர். இதுவே பழந்தமிழ் எழுத்துக்குப் பெயராக இருக்கக்கூடும்என்று கல்வெட்டு ஆராய்ச்சியாளர் இரா. நாகசாமி அவர்கள் முடிவு கட்டினார்கள். கி.மு நூற்றாண்டுகளிலும் பின்னர் கி.பி 5 ஆம் நூற்றாண்டு வரையிலும் இந்த தாமிளி எழுத்து முறையே வழக்கில் இருந்தது. தமிழ்நாட்டில் ஆனைமலை, அழகர் மலை, அரிட்டாபட்டி, அரிக்கமேடு, அரச்சலூர் முதலிய இடங்களில் தாமிளிக் கல்வெட்டுக்கள் கிடைத்து உள்ளன.

தமிழ்நாட்டில் ஆங்காங்கே இவ்வெழுத்துக் கல்வெட்டுக்கள் மேலும் நிறைய கிடைக்கலாம். பொது மக்களும், மாணவர்களும் இவ்வெழுத்துக்களை அறிந்து வைத்தால், காணும் இடங்களில் இனம்கண்டு கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்று கீழே தாமிளி எழுத்துக்கள் தரப்படுகின்றன. அவற்றைப் பலமுறை எழுதிப் பயிற்சி செய்து கொள்க.



அடுத்து : வட்டெழுத்து

என்னை நல்லபடியாக வைக்க 'வேண்டுமானால் கொழுப்புப் பண்டங்களைச் சேர்க்கக்கூடாது. மதுபானம், புகையை முற்றும் தவிர்க்க வேண்டும். நௌலி, ஒட்டியாணா, மயூராசனம் அவ்வப்போது செய்தாலும் போதும். நான் நலமாக வாழ்வேன் மாதவனையும் வாழ்விப்பேன்.

(அடுத்து : தண்டபாணியின் தைமஸ்)

—கட்டி பாரதி

FREE E- BOOKS , www.thamizham.net.,

முனைவன்-12. மணிக்கொடி பொன் விழா மலர்

அக். 84 பொருளடக்கம்

1. நவீன தமிழிலக்கிய வரலாற்றில் 'மணிக்கொடி' – ஒரு வரன்முறையான மதிப்பீட்டின் அத்தியாவசியம்	– கார்த்திகேசு சிவத்தம்பி
2. புதுமைப்பித்தனுக்கு ஊடாக ஒரு யாத்திரை	– சுந்தர ராமசாமி
3. 'மணிக்கொடியின்' இலக்கியக் கொள்கை	– கோ. கேசவன்
4. 'மணிக்கொடி'யும் எனது கருத்தும்	– கே. டானியல்
5. 'மணிக்கொடி' வழியில்......	– வல்லிக்கண்ணன்
6. தமிழிலக்கியப் பத்திரிகை உலகில் 'மணிக்கொடி'	– வெ. சிதம்பரம்
7. கு.ப.ரா. சில நினைவுகள்	– கர்ச்சான் தஞ்சு
8. வரலாற்றுப் பொருள் முதல் பார்வையில் – 'மணிக்கொடி'	– சி. கனகசபாபதி
9. 'மணிக்கொடி' வெங்கட்ராமின் 'முனைமுனைத்ததும் அலைதலும்'	– எம். வி. வெங்கட்ராம்
10. என் தந்தை அமரர் கு.ப.ரா. – ஒரு நினைவுக் குறிப்பு	– கு.ரா. பட்டாபிராமன்
11. கு.ப.ரா.வும் ஸ்ரீ ஜெய மாருதி உடசக சாலையும்	– ப. சீ. பார்த்தசாரதி
12. 'மணிக்கொடி' காரியாலயம்	– ரா. அ. பத்மநாபன்
13. 'மணிக்கொடி'யின் பரிணாமம்	– ஏ. மார்க்ஸ்

முகவரி: வே.மு. பொதியவெற்பன், அஞ்சல் பெட்டி: 55, குடந்தை-612001.

நீங்களும் சிறந்த வைத்தியராக!

அன்புடையீர்! வணக்கம்.

நீரிழிவு, தலைமுடி உதிராதிருக்க, சர்ம நோய்கள், தொழுநோய், புற்றுநோய், ஆஸ்துமா, ஆண்மைக் குறைவு, மாரடைப்பு, அல்சர், மஞ்சள் காமாலை, ஈஸ்னோபீலியா, மாதவிடாய் கோளாறுகள், மலச் சிக்கல், மூளைச்சுரம், B.P., T.B., V.D. போன்ற எவ்வகை பிணியுள்ளவர்களும், தீங்கு விளைவிக்காத, மிகமிக எளிதில் எங்கும் கிடைக்கக்கூடிய மூலிகைகளைக் கொண்டு மாத்திரை செய்து உட்கொண்டு வியக்கத்தக்க வகையில் குணமடையலாம். பலன் உறுதி.

மாத்திரை தயாரிப்பு & உபயோக முறை விபரம் புதிய ஐந்தாம் பதிப்பு "எளிய முறையில் பிணி அகற்றும் தெய்வீக மூலிகைகள்" என்ற நூலில் உள்ளன.

இப்புத்தகத்தைப் பதிவு தபாலில் பெற ரூ. 14-00ஐ 'நர்மதா பதிப்பகம்' சென்னை-17 என்ற முகவரிக்கு M. O. அனுப்புங்கள். ஹிக்கின் பாதம்ஸ் போன்ற பிரபல புத்தக கடைகளிலும் கிடைக்கும். V. P. P. இல்லை.

FREE E-BOOKS , www.thamizham.net.,

சிறுகதை

கருத்த இராத்திரி!
மெயின் பஜார் ஹோ'வென்று கிடந்தது. மெர்க்குரி விளக்கின் 'பளிச்' வெளிச்சத்தை தவிர துடைத்து போட்டது மாதிரி எதையும் காணோம்! யாரையும் காணோம்!

பாதைமேல் காலார நடந்து கொண்டிருந்தார் கர்ன்ஸ்டபிள் கதிரேசன். கால்மாட்டில் ஏதோ ஒன்று இடறியது. உற்றுப் பார்த்தார். மணிபர்ஸ்! விரைந்து எடுத்து பிரித்துப் பார்த்தார். ஐம்பதும் நூறுமாக நோட்டுகள்! ஆனந்த அதிர்ச்சியில் கதிரேசன் உடம்பு ஜிவ்வென்று ஆனது.

'அப்பா எனக்கு டபிள் நிட்டெட் பாவாடை?'

'அப்பா எனக்கு ஜீன்ஸ் பேண்ட்?'

'என் கல் தோட்டுல எண்ணை எறங்கிடிச்சு. எடுக்கணுங்க. வேற கல் தான் வைக்கணும் போல இருக்கு.'

முந்தைய பகலில் தனது காதோரமாக ஒலித்த குடும்பக் குரல்கள் மறுபடியும் ஒலிப்பது போல கதிரேசனுக்கு ஒரு பிரமை.

லோனுக்கு எழுதி வைத்து அது வந்து பின்னர் தான் அனைத்தையும் வாங்க முடியும் என்று இருந்தவர்...

"எண்ணூற்றுப் பத்து ரூபாய் எண்பத்தி அஞ்சு பைசா அர்த்த இராத்திரியில் கால்மாட்டில் விழுந்து எடுத்துக் கொள்ளச் சொன்னால் யார் தான் மத்தாப்பாக மாட்டார்கள்?

பர்சின் ஒரு புறம் அதைத்தொலைத்தவன் தெரிந்தான். புகைப்படத்தின் பின்னால் அவனது முகவரி!

கதிரேசன் எதையும் லட்சியம் செய்யவில்லை. பாக்கெட்டுக்குள் பர்ஸை அடக்கிக் கொண்டு நடந்தார்.

நாணயம்

FREE E- BOOKS , www.thamizham.net.,

விடிந்து விட்டது.

மேம்பாலத்தை தாண்டும் பொழுது ஓரமாக உட்கார்ந்து கொண்டு செருப்பு தைத்துக் கொண்டிருந்த சங்கிலி இணக்கமாக கதிரேசனை பார்த்து சிரித்து வணக்கம் சொன்னான்.

'என்ன சங்கிலி விடியக்கருக்கல்லையே ஜோலி பாக்க வந்துட்டே? இடத்தை வேற மாத்திகிட்டிருக்கே?' —கதிரேசன்.

'இந்த பக்கம் தானே ஆபீஸ் போற தொரை மாருங்க அதிகம்? பழைய இடத்துல சரியான வருமானமில்லீங்க. கொலைப்பட்டினி! அதான் இந்த பக்கம் வந்துருக்கேன்... சம்பாதிக்க நேரமேது, காலமேதுங்கசாமி! ஆமா நைட் டூட்டிங்களா?...'

'ஆமாம், வரட்டா?' —பேசிக்கொண்டே அகன்றார் கதிரேசன். முகத்தில் மகிழ்ச்சி மின்னல்.

'ஒவ்வொரு இராத்திரியும் இப்படி ஒரு பர்ஸ் கிடைத்தால்? மூளை சந்தோஷத்தோடு கேட்டது?

மணி ஒன்பது இருக்கும்... போலீஸ் ஸ்டேஷனில்...

'சார் அப்ப நான் பொறப்பட்றேன்...' —கதிரேசன். ட்யூட்டி ரிஜிஸ்டரில் கையெழுத்து போட்டுவிட்டு ரைட்டரை பார்த்தபோது சங்கிலி உள்ளே நுழைந்து கொண்டிருந்தான்.

"எசமான்" —குரலில் அதீத பணிவு ஒரு மூளையில் கிடந்த இன்ஸ்பெக்டர் நிமிர்ந்தார். பார்வையே என்ன என்று கேட்டது?

"இந்த பர்ஸ் நான் செருப்பு தைக்கற இடத்துகிட்ட கிடைச்சதுங்க. அதான் கொடுத்து போகலாமுன்னு வந்தேன்..." —சங்கிலி பர்ஸை நீட்டினான். வாங்கி பார்த்த இன்ஸ்பெக்டரின் முகத்தில் ஒரு கோடி சூரிய பிரகாசம்!

பக்கத்தில் ரைட்டர் அருகில் நின்று கொண்டிருந்த கதிரேசன் கொஞ்சம் வலியோடு சங்கிலியையே பார்த்து கொண்டிருந்தார்.

"வெரிகுட்... மிச்சத்தை நாங்க பார்த்துக்கறோம். உன் நேர்மையை ரொம்ப பாராட்டறோம்பா..." —என்றார் இன்ஸ்பெக்டர்... சங்கிலி அதை கேட்டு வெட்கத்தோடு சிரித்தான். பிறகு பேசினான்.

FREE E- BOOKS , www.thamizham.net.,

"இது என்னங்க பெரிய விஷயம் உழைக்கற காசே உடம்புல ஒட்ட மாட்டேங்குது. இந்த மாதிரி வந்தா செறிக்க போவுது? அதைவிட இதை தொலைச்சவன் வயிறு என்னமா எரியும்? —அதை யோசிச்சு பார்க்கணுங்க."

"பரவாயில்லையே .. நல்லா பேசுற நீ. உன் மாதிரி எத்தனை பேரு நினைச்சு பார்க்கறாங்க? எல்லாரும் நினைச்சுப் பார்க்கணும். அப்பதான் போலீஸ் காரங்களான எங்களுக்கும் நல்லபேரு, சமூகத்துக்கும் நல்ல பேரு..."

"ரொம்ப சந்தோஷமுங்க. எல்லாம் நம்ம கதிரேசன் ஐய்யா பழக்கத்தால் வந்தது தான்! செருப்பு தைக்கற சங்கிலி தானேன்னு நெனைக்காம, நின்னு மரியாதையா பேசுவாருங்க... அவருக்கு பழக்கமா இருந்துகிட்டு தப்பு வேலை பண்ணலாமுங்களா?"

—இன்ஸ்பெக்டர் புன்கையோடு கதிரேசன் பக்கம் திரும்பியபோது, கதிரேசன் வெட்கத்தோடு காந்தி படத்தை பார்த்துக் கொண்டிருந்தார்.

—இந்திரா செளந்தர்ராஜன்

ஆஸ்திரேலியாவைக் கண்டுபிடித்தவர் தமிழர்?

தற்கால வரலாற்றின்படி காப்டன் கூக் என்ற ஆங்கிலேயர் ஆஸ்திரேலியாவைக் கண்டுபிடித்தார். ஆனால் பதினெட்டு அல்லது பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த தமிழ் எழுத்துகள் பொறிக்கப்பட்ட பெரிய மணி ஒன்றை, ஆஸ்திரேலியாவிற்குக் கிழக்காக, நியூசிலாந்திற்கு மேற்காக உள்ள நார்த் அய்லண்டில், கி.பி 1836-இல் நியூசிலாந்தைச் சேர்ந்த கிறித்துவ மிஷனரி `அருள்திரு குளான்சோ (Rev. Colenso) கண்டு பிடித்தார்.

இம்மணியின் அடி முகப்பில் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. அது வருமாறு: "மொகயத்தின் பக்கூஸ் உடைய கப்பலுடைய மணி" ("This is the bell of the ship of Mohayathin Bakkus") இம்மணி இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு தமிழர் அல்லது தமிழர்களுடைய கப்பல், தமிழ் நாடு, மலேயா, தென்கிழக்கு ஆசியா வழியாக ஆஸ்திரேலியாவைத் தாண்டிப் பயணம் செய்ததை எடுத்துக் காட்டுகிறது. (ஆதாரம்: தமிழரின் தாயகம்-க.ப அறவாணன்

FREE E- BOOKS , www.thamizham.net.,

எங்கு சென்றாலும் சுலபமாய் வேலை கிடைக்கும்

S.S.L C. படித்திருந்தால் கூடப்போதுமானது

ACCOUNTANCY

பயிலுக! கணக்கு எழுதும் முறை தெரிந்திருந்தால் யார் சிபாரிசும் தேவையில்லை! சுலபமாய் வேலை கிடைத்துவிடும். ஏனெனில், எங்குமே கணக்கர்கள் தேவையாயிருக்கிறது. எட்டே மாதப் படிப்பு தான். தபால் மூலம் பயிற்சியும் பெற்று அத்தாட்சியும் பெறலாம். மாதந்தோறும் ரூ 20 அனுப்பினாலே போதும். முழு விபரம் பெற 30 பைசா ஸ்டாம்பு அனுப்புக.

'தங்கராஜ் கல்வி நிலையம்'

45, ஆற்காட் ரோடு, சென்னை-600 024.

S S L.C. & H.S.C. (+2)

(தமிழ்நாடு அரசு பொதுத் தேர்வுகள்)

வீட்டிலிருந்தே படித்து பாஸாகலாம்

16 வயது நிரம்பியவர்கள் 8வது தேறியிருந்தால் S. S. L. C. பிரைவேட்டாக எழுதலாம்.

18 வயது நிரம்பியவர்கள் 10வது (S.S.L.C) தேறியிருந்தால் H.S.C (+2) பிரைவேட்டாக எழுதலாம்.

பாடங்கள் அனைத்தும் தபால் மூலம் அனுப்பி வைக்கின்றோம். பயிற்சிக் கட்டணம் மாதந்தோறும் M.O. மூலம் அனுப்பினால் போதும். முழு விபரம் பெற 30 பைசா ஸ்டாம்பு அனுப்புங்கள்.

தங்கராஜ் கல்வி நிலையம்

45, ஆற்காட் ரோடு, கோடம்பாக்கம், சென்னை-600 024.

FREE E- BOOKS , www.thamizham.net.,

மாணவர்கள் வருங்காலம் பல்கலைக் கழக குப்பைக் கூடையில்!

சென்னைப் பல்கலைக் கழக நிர்வாக முறைகேடினால் மாணவர்களுக்குத் தேர்வில் வழங்கப்படும் மதிப்பெண்கள் பாதிக்கப்படுவதை முன்பே எழுதியிருக்கிறோம். இப்போது அவர்களின் எதிர்காலத்தை எவ்வித தயை தாட்சண்யமுமின்றி குப்பையில் எறிந்த வயிற்றெரிச்சலை எழுதுகிறோம். பல்கலைக் கழகத் தேர்வுகளில் தேறிய மாணவர்களுக்கு 'பட்டச் சான்றிதழ்' வழங்க (Degree Certificate) சிறிது கால தாமதமாகும்.

எனவே, போட்டித் தேர்வு, வேலை வாய்ப்பு, மேற்படிப்பு இவற்றுக்கு உடனடியாகப் பயன்படும்வண்ணம் கட்டணமும், அஞ்சல் தலை ஒட்டப்பட்ட சுய முகவரி உறையும் மாணவர்களிடமிருந்து பெறப்பட்டு தற்காலிகப் பட்டச் சான்றிதழ் அஞ்சல் மூலம் அனுப்பப்படும். ஆனால் *செப்டம்பர்* மாதத்தில் பல்கலைக் கழகத்தில் சான்றிதழ் பிரிவில் நடந்த பேரதிர்ச்சி தரும் பயங்கரப் பகற்கொள்ளையைப் பதிவாளர் கண்டு பிடித்துள்ளார். மாணவர்கட்கு அனுப்பப்படவேண்டிய சான்றிதழ் அடங்கிய உறையிலிருந்து அஞ்சல் தலைகளைப் பிய்த்து எடுத்துக்கொண்டு சான்றிதழ் உறையுடன் கோணிகளில் நிரப்பி மூலையில் தூக்கி எறியப்பட்டுள்ளது. முகமூடிக் கொள்ளைக் காரர்களை விட மோசமான இக் கொள்ளைக் காரர்களைக் கண்டு பிடிக்கப் பல்கலைக் கழக நிர்வாகம் விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளது. முன்னாள் பதிவாளர் சம்பந்தப்பட்ட சிமெண்ட் ஊழலும், அவர்மேல் நடவடிக்கை எடுக்கப்பட்ட அலங்கோலமும் நமக்கு முன்பே தெரியும். இந்த விசாரணை மட்டும் என்ன, பெரிதாக கிழித்து விடப் போகிறது? மாணவர்களே! உங்கள் எதிர்காலம் பல் கலைக் கழக சான்றிதழ்ப் பிரிவின் குப்பைக் கூடையில்!

"கார்த்திக்"

FREE E- BOOKS , www.thamizham.net.,

ஆசிரியர் ... பதிப்பாளர்: கா. ராமச்சந்திரன்
494, அண்ணா நகர், சென்னை-40. அச்சகத்தார்: J.S. கிட்ராஜ் ஷா,
... பிரிண்டர்ஸ், 96, ... சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-600002.

FREE E- BOOKS , www.thamizham.net.,

FREE E- BOOKS , www.thamizham.net.,

[illegible] 1984 Regd. No. TN/MS(N)/317
Licensed to post without prepayment Licence No. TN/MS(N)WPP-56



Sakthi Sugars Limited

A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugarcane production with innovative technology and the farmers have achieved a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonnes to earn an additional income of Rs. 3,000/- Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distributing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development programmes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Technology promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District.

http://www.thamizham.net FREE E-BOOKS (TAMIL)
FREE E-BOOKS , www.thamizham.net.,